# உன் தீபம் நான் உனக்காக எரிகின்றேன்

உன் தீபம் நான் உனக்காக எரிகின்றேன்
என் தேவன் நீ உன்னடி தொழுகின்றேன்
யேசையா சரணம் யேசையா

**1**
என் வாழ்வில் உதயமாய் வருவாய் என்று
என் இரு விழி வாசல் திறந்து வைத்தேன்
உள்ளத்தால் தானே நான் வாழ்கின்றேன்
உனக்காகத் தானே எரிகின்றேன்

**2**
கடல் நீர் எல்லாம் வற்றி விடும்
உன் கருணை என்னை விட்டிடுமோ
உனக்காய் என்னைத் தந்து விட்டேன்
மெழுகாய் உன் முன் உருகி விட்டேன்